




திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழக ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினர். இதில் ஒன்றிய, நகர, பேரூர், கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.



நீட் தேர்வுக்கு எதிராக போராடி உயிர் நீத்த மறைந்த மாணவி அனிதாவின் நினைவு நாளை முன்னிட்டு நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி திருச்செங்கோடு திமுக அலுவலகத்தில் மாவட்டப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே. எஸ்.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது . மாநில தி.மு.க. மாணவர் அணி துணை செயலாளர் ஆர்.சுரேஷ்குமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் திருச்செங்கோடு கிழக்கு நகர செயலாளர் தா.கார்த்திகேயன் திருச்செங்கோடு ஒன்றிய செயலாளர்கள் வட்டூர் தங்கவேல், அருண்குமார், தளபதி சுப்பிரமணியம், சரவணகுமார், ஏ.பி.ஆர்.சண்முகம், பழனிவேல், தங்கவேல், ராமசாமி, யுவராஜ், பேரூர் செயலாளர் கார்த்திக் ராஜ் மற்றும் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

### மலேசியாவில் மருத்துவ ஆய்வுப் படிப்பு மேற்கொண்டுவரும்

# மாணவர் பாரதிதாசனுக்கு உடனடியாக உதவித்தொகை அனுப்பிடுக!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, செப். 4 -

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு அரசின் டாக்டர் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் நிதி பெற்று, மலேசிய தேசியப் பல்கலைக்கழகத்தில் மருத்துவத் துறையில், திசுப் பொறியியல் மற்றும் மீள் உருவாக்க மருத்துவத் துறையில், முனைவர் பட்ட ஆய்வு மாணவராக இரண்டாம் ஆண்டு படித்து வரும் மதுரை உசிலம்பட்டியைச் சேர்ந்த மாணவர் பாரதிதாசன் அண்மையில் தமது நடப்பு ஆண்டுக்கான கல்வி உதவித் தொகை வழங்கப்படவில்லை என்று சமூக ஊடகங்கள் வழியாகத் தெரிவித்து இருந்தார்.

**இன்னமும் தமிழ்நாடு அரசு அனுப்பவில்லை!**

கடந்த ஆண்டு செலவுகளுக்குரிய கணக்குகளையும், அவற்றுக்கான ரசீதுகளையும் கடந்த ஜூன் 8 அன்றே சமர்ப்பித்துவிட்டார். அவரது ஆராய்ச்சிப் படிப்பு குறித்த பல்கலைக்கழகத்தின் தரநிலை அறிக்கையும் அங்கிருந்து பல்கலைக்கழகத்தால் அனுப்பப்பட்டுவிட்டது. இந்நிலையில், இவ்வாண்டுக்கான ரூ.36 லட்சம் மதிப்புள்ள உதவித் தொகையில், ரூ.5 லட்சத்துக்கான கல்வித் தொகையும், ரூ. 6 லட்சத்துக்கான வாழ்வாதாரச் செலவுகளுக்கான தொகையும் வழங்கப்பட்டுவிட்ட நிலையில், இவ் வாண்டின் ஆய்வைத் தொடர்வதற்காக வழங்கப்பட வேண்டிய ரூ.21 லட்சம் அளவிலான தொகையை இன்னமும் தமிழ்நாடு அரசு அவருக்கு அனுப்பவில்லை.

**கேள்விகள் தொக்கி நிற்கின்றன!**

இது தொடர்பாக, ஊடகங்களும், எதிர்க்கட்சிகளும் கேள்வி எழுப்பிய நிலையில், தமிழ்நாடு சட்டமன்றத்திலும் வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன. அவர் ஏன் ஷூ வாங்கினார்? கோட் வாங்கினார் என்றெல்லாம் சமூக ஊடகங்களில் சிலர் எழுப்பிய கேள்விகளுக்கு, அவர் படிக்கும் திசுக்கள் தொடர்பான ஆய்வுத் துறையில் இவற்றின் அவசியத்தை அனைவரும் எடுத்துரைத்து விட்டனர். ஆனால், இன்னமும் அத்தொகையை அவருக்கு அனுப்பாமல், கடந்த இரு மாதங்களுக்கு முன் அனுப்பப்பட்டுவிட்ட ரசீதுகளுக்கு, அப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அலுவலகத்தில் சீல் வைத்து அனுப்ப வேண்டும் என்று புதிதாக இப்போது தமிழ்நாடு அரசு கோரியுள்ளது. அப்படியான எந்த நடைமுறையும் இதுவரை சொல்லப்படாத நிலையில், இப் பிரச்சினையில் மேலும் காலதாமதம் ஏற்படுத்தும் வகையில்தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. இத்தகைய விதி, உதவித் தொகை பெறும் அனைத்து மாணவர்களுக்குமா? எப்போது இத்தகைய விதி அறிமுகப்படுத்தப்பட்டது? என்ற கேள்விகள் தொக்கி நிற்கின்றன.

தற்போதைய நிலவரப்படி, உதவித் தொகை தமிழ்நாடு அரசிடமிருந்து வராததாலும், அரசியல் பிரச்சினையாக இது சட்டமன்றத்திலேயே விவாதிக்கப்பட்டு இருப்பதாலும், பல்கலைக்கழகத்திலிருந்து அம் மாணவருக்குப் படிப்பை இடைநிறுத்த வேண்டிய அளவுக்கு நெருக்கடியான சூழல் எழுந்துள்ளதாகத் தெரிகிறது.

**உரிமையுடன் இதனை நாம் வலியுறுத்த விரும்புகிறோம்!**

தமிழ்நாடு அரசு தர வேண்டிய உதவித் தொகையை நம்பி, தமது படிப்பை அயல்நாடு ஒன்றில் மேற்கொண்டுவரும் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு மாணவரை இப்படி அலைக்கழிப்பது ஓர் அரசுக்கு அழகல்ல. சமூகநீதித் துறை என்று பெயர் மாற்றப்பட்டுள்ள ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்திற்கான துறை, தனது கடமையிலிருந்து வழுவக் கூடாது; தனிப்பட்ட முறையில் இப் பிரச்சினையை அணுகக் கூடாது. அத்துறைக்குப் பொறுப்பேற்று அமைச்சராக உள்ள தோழர் வன்னி அரசு அவர்கள் சமூகநீதிச் சிந்தனையிலிருந்து வந்தவர் என்ற உரிமையுடன் இதனை நாம் வலியுறுத்த விரும்புகிறோம்.

உடனடியாக, அம் மாணவருக்கு உரிய உதவித் தொகையினைக் காலதாமதம் இன்றி அனுப்பிட அரசு ஆவன செய்ய வேண்டும் என்று அவசரம் கருதி வலியுறுத்த விரும்புகிறோம்.

மேலும், அண்ணல் அம்பேத்கர் அயலக உயர் கல்வி உதவித் தொகைக்காக இவ்வாண்டு விண்ணப்பித்து, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 316 ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள், அய்க்கிய ராஜ்ஜியத்தின் (UK) பல்கலைக்கழகங்களில் பயில்வதற்கு, ஒன்றிய அரசின் உதவித் தொகை உத்தரவாதத்தைத் தான் ஏற்கமுடியும்; தமிழ்நாடு அரசின் உதவித்தொகையைக் கருத்தில் கொள்ள முடியாது என்று அந்நாடு நிராகரித்திருப்பதால், மாணவர்கள் அனைவரும் தவித்து வருகின்றனர். தனியார் வங்கிகள் தரும் உத்தரவாதங்களை ஏற்று, கல்வி கற்க அனுமதிக்கும் அய்க்கிய ராஜ்ஜியம், ஒரு மாநில அரசின் உதவித் தொகைத் திட்டத்தை நம்ப மறுப்பது ஏன்? இது தொடர்பாக ஒன்றிய அரசின் வெளியுறவுத் துறை மூலம் அந் நாட்டுடன் பேச்சு நடத்தி நமது மாணவர்கள் உரிய நேரத்தில் தங்கள் கல்வியைத் தொடங்க ஆவன செய்ய வேண்டாமா? தமிழ்நாடு அரசிடமிருந்து இங்கிலாந்து தூதரக உயர் ஆணையரைத் தொடர்பு கொள்ள, அல்லது தொடர்பு கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**தமிழ்நாடு அரசின் கடமை அல்லவா?**

உள்நாட்டில், வேறொரு மாநிலத்தில் சென்று கல்வி பயில்வதே, பல்வேறு தடைகளைத் தாண்ட வேண்டிய ஓட்டம் என்றால், கண்டம் தாண்டிச் சென்று முதல் தலைமுறையாகப் படிக்க முயலும் மாணவர்களைத் தொடக்கத்திலேயே மன உளைச்சலுக்கும், அச்சுறுத்தலுக்கும் ஆளாக்காமல் காக்க வேண்டியது தமிழ்நாடு அரசின் கடமை அல்லவா? டாக்டர் டி.எம்.நாயர், டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர், டாக்டர் பல்பு போன்று அயல்நாடுகளில் சென்று படித்து வந்தவர்கள் நிகழ்த்திய சமூகப் புரட்சிதான், இன்று நாம் எட்டியிருக்கும் சமூகநீதிக்கான கதவுகளைத் திறந்துவிட்டது. இந்த மாணவர்களில் எத்தனையோ பேர், நம் இனத்தின் அடுத்த கட்டப் பாய்ச்சலுக்கான உந்து சக்தியாக இருக்கக் கூடும். அவர்களைத் தடையின்றி கல்வி பயிலச் செய்வது நம் கடமை.

**தடைகளை ஒதுக்கி உதவிடுவது அவசியம், அவசரம்!**

2017 ஆம் ஆண்டு இதே நாளில் நீட் என்னும் கொடுந் தேர்வு காரணமாகத் தன்னை மாய்த்துக் கொண்ட, அருமைச் செல்வம் அனிதா கூட, அப்போது மருத்துவப் படிப்பில் இணைந்திருந்தால், இப்படியொரு மேற்படிப்புக்கான முயற்சியில் இறங்கியிருக்கக் கூடும். நாம் நிறைவேற்ற முனைவது அனிதாக்களின் கனவை, அம்பேத்கரின் முன்னெடுப்பை, தந்தை பெரியாரின் போராட்டத்தை! கிடைத்த அதிகாரத்தைக் கொண்டு செய்ய வேண்டிய பணியை அரசின் - அதிகார வர்க்கத்தின் சில சட்ட சிக்கல்களையும், ஆணைகளையும் மனிதாபிமானத்துடன் அணுகி, கல்வி நீரோடை அனைவருக்கும், குறிப்பாக காலங்காலமாக மறுக்கப்பட்ட மக்களுக்கு - மாணவர்களுக்கு முன்னுரிமை தந்து, தடைகளை ஒதுக்கி உதவிடுவது அவசியம், அவசரம்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### த.வெ.க. ஆட்சியின் அவலநிலை! சேலம் கோரிமேட்டில் உள்ள

# அரசு கல்லூரி மாணவிகள் பசியுடன் பாடம் படிக்கும் அவலம்!

## அதிகாரிகளிடம் கூறியும் எந்த நடவடிக்கையும் இல்லை என மாணவிகள் குமுறல்!

சேலம், செப். 4 -

சேலம் கோரிமேட்டில் அரசு மகளிர் கலைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இந்த மகளிர் கல்லூரியை அப்போதை முதலமைச்சராக இருந்த கலைஞர் 1973ல் தொடங்கி வைத்தார்.

இக்கல்லூரியில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் இளங்கலை மற்றும் முதுகலைப் படிப்பு படித்து வருகின்றனர்.

இக்கல்லூரிக்கு அருகிலேயே 2 சமூகநல விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

இதில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட மாணவிகள் தங்கி படித்து வருகின்றனர். இந்த மாணவிகளுக்கு தரமான மற்றும் தேவையான உணவு வழங்கப்படுவதில்லை என்று புகார் கூறுகிறார்கள். அதோடு விடுதியில் மாணவிகளை கட்டாயப்படுத்தி வேலை வாங்குகிறார்கள்

இது குறித்து மாணவிகள் கூறியதாவது:

மாணவிகளின் எண்ணிக்கைக்கு தேவையான அளவு உணவு பொருள் ஒதுக்கீடு செய்யப்பட்டாலும் அதன் பலன் முழுமையாக எங்களுக்கு கிடைப்பதில்லை. குறிப்பாக 4 இட்லி வழங்க வேண்டியதில்

2 இட்லி மட்டுமே வழங்குகின்றனர். 100 மாணவிகள் இருந்தால் 80 முட்டைகள் மட்டுமே கொடுக்கின்றனர் மீதமுள்ள முட்டை மற்றும் அரிசி மாவை வார்டன் மற்றும் சமையலர் வீட்டிற்கு

எடுத்துச் சென்று விடுகின்றனர். ஆக அரசு விடுதியில் தங்கி பசியுடன் அரை வயிற்றுடன் தான் படிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது.

விடுதியில் உள்ள குறைபாடுகள் குறித்து உயர் அதிகாரிகளின் பார்வைக்கு கொண்டு சென்றும் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என்று மாணவிகள் கூறினார்கள்.

த.வெ.க. ஆட்சியில் கல்லூரி மாணவிகள் பசியுடன்தான் பாடம் படிக்க வேண்டியுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

# புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லபாண்டியன் அறிவிப்பு!





புதுக்கோட்டை, செப். 4 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாளை (05.09.2026 - சனிக்கிழமை ) காலை 10 மணியளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏசி) மஹாலில் புதுக்கோட்டை தலைமை கழக பிரதிநிதிகள் ஏ.கே.எஸ்.விஜயன், மதுரை பாலா ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது. முன்னாள் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், அறந்தாங்கி ராசன், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச் சுடர் கவிதைப்பித்தன், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, டாக்டர் வை. முத்துராஜா எம்.எல்.ஏ மேயர் திலகவதி செந்தில், அஞ்சுகாமீனாட்சிசுந்தரம், புதுக்கோட்டை விஜயா, த.சந்திரசேகரன், பி.டி.அரசக்குமார், வி. என்.மணி, சுப.சரவணன், பரணி இ.ஏ.கார்த்திகேயன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, செ.அசோக்பாண்டியன் கே.ஆர்.என்.போஸ், அரு.வீரமணி, அ.சுப்பிரமணியன், எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, ஞான. இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, அடைக்கலம், எம்.லியாகத்அலி, அபுதாஹீர், கீரை.தமிழ் ராஜா, சு.சண்முகம், இரா. ஆனந்த், எஸ்.ஜெயராமன், ஆர்.ஆர்.கே.கலைமணி, வே.ராஜேஸ், க.ராஜேந்திரன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பி க்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: 22.8.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமைச் செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின் படி ஒன்றிய, நகர, பேரூர் கழகம் மறு சீரமைப்பு பணிகள் சம்பந்தமாக, கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளனர்.

# ‘நீட்’ தேர்வுக்கு எதிராகப் போராடிய மாணவி அனிதா நினைவு நாள்!

## நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மலரஞ்சலி!

நாமக்கல், செப். 4 -

அரியலூர் மாவட்டம் செந்துறை அருகே குழுமூர் கிராமத்தைச் சேர்ந்த மாணவி அனிதா, கடந்த 2017ஆம் ஆண்டு நடைபெற்ற பிளஸ்2 பொதுத் தேர்வில் 1,200க்கு 1,176 மதிப்பெண்கள் பெற்று சிறப்பான சாதனை படைத்தார்.

மாநிலப் பாடத்திட்டத்தில் தமிழ் வழியில் பயின்ற அவர், மருத்துவப் படிப்பில் சேர வேண்டும் என்ற கனவுடன் படித்து வந்தார். பிளஸ் 2 மதிப்பெண் அடிப்படையில் மருத்துவப் படிப்புக்கான அவரது கட் ஆஃப் மதிப்பெண் 196.75 ஆக இருந்தது.

ஆனால், 2017 ஆம் ஆண்டு மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு நீட் தேர்வு கட்டாயமாக்கப்பட்ட நிலையில், அனிதாவும் நீட் தேர்வை எழுதினார். அதில் 700க்கு 86 மதிப்பெண்கள் மட்டுமே பெற்றார்.

நீட் தேர்வு அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கை நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பிளஸ் 2 மதிப்பெண் அடிப்படையிலேயே மருத்துவ மாணவர் சேர்க்கை நடத்த வேண்டும் எனக் கோரி அனிதா நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தினார். இந்த விவகாரம் தொடர்பாக உச்சநீதிமன்றம் வரையிலும் சென்று தனது நிலைப்பாட்டை முன்வைத்தார்.

இந்நிலையில், நீட் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காததால் மனவேதனை அடைந்த அனிதா, 2017 செப்டம்பர் 1ஆம் தேதி குழுமூரில் உள்ள தனது வீட்டில் உயிரிழந்தார். அவரது மரணம் தமிழ்நாட்டில் நீட் தேர்வு தொடர்பான பெரும் விவாதத்தையும் போராட்டங்களையும் ஏற்படுத்தியது.

இந்நிலையில் மறைந்த மாணவி அனிதாவின் நினைவு நாளை முன்னிட்டு நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக மாணவர் அணி சார்பில் மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி திருச்செங்கோடு திமுக அலுவலகத்தில் மாவட்ட திமுக பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே. எஸ்.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது .

இந்நிகழ்ச்சியில் மாநில திமுக மாணவர் அணி துணை செயலாளர் ஆர். சுரேஷ்குமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் திருச்செங்கோடு கிழக்கு நகர செயலாளர் தா.கார்த்திகேயன் திருச்செங்கோடு ஒன்றிய செயலாளர்கள் வட்டூர் தங்கவேல், அருண்குமார், தளபதி சுப்பிரமணியம், சரவணகுமார், ஏ.பி. ஆர்.சண்முகம், பழனிவேல், தங்கவேல், ராமசாமி, யுவராஜ், பேரூர் செயலாளர் கார்த்திக் ராஜ் வழக்கறிஞர் கிரி சங்கர் மற்றும் நகர ஒன்றிய மாணவரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும்தி.மு.க.நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மலர் அஞ்சலி செலுத்தினர்.

# அரியலூர் மாவட்டம் - ஜெயங்கொண்டம் மேற்கு ஒன்றியப் பொறுப்பாளர் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் மேற்கு ஒன்றிய பொறுப்பாளராக பணிபுரிந்த தன.சேகர் அவர்கள் தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டதால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, **வீ.சிவா (எ) சிவகுருநாதன்** (பிலிச்சுக்குழி, ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம்) அவர்கள் ஜெயங்கொண்டம் மேற்கு ஒன்றியப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 02.09.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# வெளிச்சம் விரைவில் வரும்!

**நா**ள்தோறும் படப்பிடிப்பு
நல்லவர் வேடத்தில் நடிப்பு
இயக்குனர் யார் என்று
புரிகிறது - நம்
இனத்தின் எதிரி என்பது
தெரிகிறது.

மாண்புமில்லை மரபுமில்லை
வளர்ச்சியில்லை வாய்ப்புமில்லை
வாய்ச்சவடாலுக்குக்
குறைச்சல் இல்லை.

திட்டங்கள் திசை மாறுகின்றன
கட்டுமானங்கள் களைகின்றன
இத்தனை நாள் வளர்ச்சியை
மொத்தமாய் வீழ்த்த
எத்தனை பேர் கூட்டணியோ?
‘சோபா’வின் சொகுசு அழைக்கிறது
சுயநலம் பல்லை இளிக்கிறது.

‘மாற்று அரசியல்’ என்பது
‘டைவர்ஷன் பாலிடிக்ஸ்’ என்றானது.

குறுக்குவழி வெற்றிகளும்
‘குலுக்கலில்’ கிடைத்த
கோட்டை கொத்தளமும்
நீடித்து ஓடாது
நிலைபெற்று நிற்காது.

வேருக்கு நீர் ஊற்ற
கிளை வளரும் - கூடவே
களை வளரும்.
நன்றி கொல்வது
இனத்தின் எழுச்சியா?
நம்பிக்கை துரோகம்
சமூக நீதி புரட்சியா?

எப்படியும் வாழலாமா?
இப்படியும் ஆளலாமா?

தொலைந்து போனால் ஓடுதளத்தில்
தொழில்துறை ‘டேக்-ஆப்’ ஆகுமா?

அயோத்தி ராமருக்கே
நாமம் போடுவதா;
பழனி முருகனுக்கு
மொட்டை போடுவதா?

காலம் சிலநேரம் தடுமாறலாம் - நம்
கொள்கை ஒருநாளும் தடம்மாறாது!

ஒளித்து வைத்தால்
திருக்குறள் பொருள் இழக்காது
மறைத்து வைத்தால்
மல்லிகை மணம் இழக்காது.

இது -
கிரகண காலம்!
நீண்ட நேரம் நீடிக்காது
நிச்சயம் தொடர்ந்து பீடிக்காது !

கோமாளித்தனங்கள் முடிவுறும்
கொள்கை மீண்டும் முடிசூடும்

வெளிச்சம் மீண்டும் வரும்
வெற்றியைத் தரும்

இமயம் நிகர் சாதனையில்
எவரெஸ்டாக நம் தலைவர்
காட்சி தருவார் - நல் ஆட்சி தருவார்!



**அறந்தாங்கி வெங்கடேசன்**